# அம்தோ தஹு (Amdo, Rtahu)

**வசிப்பிடம்:** சிசுவான் (Sichuan) மாநிலத்தில் மேற்குப் பகுதியில் சுமார் 70,000 தஹு அம்தோ மொழி பேசுபவர்களுள்ளனர். இவர்கள் முக்கியமாகத் தாவு (Dawau) மற்றும் லுஹுஅ (Luhuo) மாவட்டங்களில் முரடான ஷியன்ஸுயை (Xianshui) நதியின் கரையோரத்தில் உள்ள புல்வெளிகளில் வசிக்கின்றனர். இந்த இரு மாவட்டங்களும் சிசுவான் மாநிலத்தின் வடமேற்கில் உள்ள மிகப்பரந்த கர்செ (Garze) திபெத்திய தன்னாட்சிப் பகுதியைச் சேர்ந்தவை. இது முக்கியமாக மூர்க்கமான கம்பா திபெத்தியர்களின் பகுதியாகும்.




**அடையாளம்:** தஹுக்கள் நான்கு அம்தோ இனங்களில் தென்கோடியைச் சேர்ந்தவர்கள். மொழியியலாளர்கள் தஹு அம்தோவின் ஒரு வகை என அடையாளம் காட்டியுள்ளனர் ஆனால் தஹு மக்கள் தாங்கள் கலாச்சாரத்தின் அடிப்படையில் கம்பா திபெத்தியர்களைச் சேர்ந்தவர்கள் என வாதாடுகின்றனர்.

**மொழி:** தஹு மொழி அம்தோ மற்றும் கம்பா மொழிக்கு இடையில் நிலைதிரிந்த நிலையில் காணப்படுகிறது. இவ்விரண்டு மொழிகளும் 70 சதவீதம் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. தஹு மொழியில் ப்ரக்கொ (Braghgo) மற்றும் தஹு என்னும் இரண்டு வட்டார மொழி வழக்குகள் உள்ளன.

**வரலாறு:** திபெத்திய வரலாறு ஆவிக்குரிய ஞானத்தைத் தேடிச்சென்ற இவர்களது மதம் சார்ந்த வாழ்க்கைப் பிரயாணத்தைப் பிரதிபலிக்கிறது. கி.பி.1950 ல் சீன இராணுவம் சிசுவான் மாநிலத்திலிருந்து திபெத்தின் மீது தாக்குதல் செய்தது மற்றுமொரு படை தெற்காக ஷின்சாங்கிலிருந்து (Xinjiang) திபெத்தை நோக்கிச் சென்றது. அம்தோ இனத்தைச் சேர்ந்த 14 வது தலாய் லாமா தென்சின் க்யசொ (Tenzin Gyatso) இந்தியாவிற்குத் தப்பியோடினார். தன் இருப்பிடமாகிய வட இந்தியாவின் தர்மசாலாவிலிருந்து (Dharamsala) தன்னுடைய ஜனங்களின் விடுதலைக்காகக் குரல்கொடுத்துக் கொண்டிருக்கிறார். கிபி. 1913 லிருந்து கி.பி. 1950 வரைக்கும் திபெத் சொந்தக் கொடி, நாணயம் மற்றும் கடவுச்சீட்டை ஏற்படுத்தி ஒரு தனிநாடாகத் தன்னுடைய உரிமையை நிலைநிறுத்த முயற்சிசெய்தது. திபெத்திய கடவுச்சீட்டு இங்கிலாந்து, இந்தியா மற்றும் அமெரிக்காவில் மட்டுமே சட்டப்பூர்வமான அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கி.பி. 1910 ல் தலாய் லாமாவின் உருவமுடைய திபெத்திய தபால்தலை இந்தியாவில் அச்சடிக்கப்பட்டது. 'தலாய் லாமாவிற்கு அவமானம் உண்டாகும்படி தபால்தலை காலால் மிதிபட வாய்ப்புள்ளதாலும் அஞ்சல் அலுவலகத்தில் அவருடைய தலையைச் சுத்தியலால் அடிக்க யாராலும் கூடாது என்பதாலும் திபெத்தியர்கள் இந்தத் தபால்தலையை ஏற்றுக்கொள்ளவில்லை.'

**மதம்:** தஹு அம்தோக்கள் மிகுந்த ஈடுபாடுள்ள திபெத்திய புத்த மதத்தினராவார்கள்.

**கிறிஸ்துவம்:** கையளவு தஹுக்கள் மட்டுமே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கின்றனர். பூகோள, சமுதாய , கலாச்சார மற்றும் மொழி சார்ந்த தடைகள் தஹுக்களுக்குச் சுவிசேஷம் கொண்டுசெல்வதை மிகக்கடினமான காரியமாக்கு கின்றன. சீன ஜெபவீட்டுச் சுவிசேஷகர்கள் கடந்த சில வருடங்களில் இவர்கள் மத்தியில் வாழ முயற்சிசெய்தனர்; ஆனால் இவர்களுடைய குடியிருப்பு சீன அதிகாரிகள் மற்றும் திபெத்தியர்களிடையே சந்தேகத்தை எழுப்பியது. கி.பி. 1920 களில் திபெத்தியர்கள் மத்தியில் பணிசெய்யப் பயன்படுத்தப்பட்ட தகுதி அடிப்படை, இங்குப் பணிசெய்ய விரும்பும் வெளிநாட்டு மற்றும் சீன மிஷனெரிகளுக்கு இன்றும் பொருந்தும்: "திபெத்தியர்கள் மத்தியில் செய்யப்படும் பணி மற்றெல்லா இடங்களைக் காட்டிலும் கடினமாயிருப்பதால் திடமான இருதயமுள்ள ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பாடுகளையும் ஆபத்துக்களையும் சந்திக்கப் பயப்படும் மிஷனெரிகளைத் திபெத்திற்கு அனுப்பக்கூடாது."




**Population:**
78,800 (2000)
97,100 (2010)
119,600 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:** Tahu

**மக்கள்தொகை:** 60,600 (1987, Language Atlas of China)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, போதி, போதிஷ், வடக்கு திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 2 (Braghgo, Tahu)

**புத்த மதத்தினர்:** 100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி. 1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : ADX04

**கிறிஸ்துவத்தின் நிலை**

